**தமிழ்நாடு அரசு**
நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூராட்சிகள் நிர்வாகம்)

**திட்டச்சேரி முதல் நிலை பேரூராட்சி**
**நாகப்பட்டினம் மாவட்டம்**

**ந.க.எண். 166/ 2010** **நாள்.21.06.2010**

# ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம் திட்டச்சேரி முதல்நிலை பேரூராட்சி 2010–2011–ஆம் ஆண்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010–2011 திட்டத்தின் கீழ் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 07.07.2010–ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை 07.07.2010–ம் தேதி மாலை 4.00 மணிக்கு வருகைபுரிந்த ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 06.07.2010–ஆம் தேதி மாலை 5.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சம்) ரூ. | டேவணித் தொகை (லட்சம்) ரூ. | ஒப்பந்தப்புள்ளி களின் விலை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010–2011** | | | | |
| 1 | திட்டச்சேரி பேரூராட்சி பேருந்துநிலையம் அமைத்தல் | 14.00 | 70,000 | 6000+ Vat 4% | 60 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேலை நாட்களில் திட்டச்சேரி பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ளவாறு 21.062010 முதல் 06.07.2010 வரை பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி படிவ கட்டணம் திரும்ப வழங்க இயலாது. ஒப்பந்தப்புள்ளி படிவ கட்டணம் வங்கி வரைவேலையாகவும் திட்டச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் பெயரில் செல்லத்தக்க வகையில் அளித்து பெற்றுக்கொள்ளலாம்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in, www.townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்தின் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகையுடன் உரிய கலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வங்கி வரைவேலையாகவும் தொடர்புடைய செயல் அலுவலர் பெற்றுக்கொள்ள தக்க வகையில் அனுப்ப வேண்டும். மேற்படி வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளி கோரும் 30 நாட்களுக்கும் மேற்கொண்டு ஒப்பந்தப்புள்ளி நாட்களிலிருந்து 30 நாட்கள் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

த.பி.பா.

4. ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலர் திட்டச்சேரி பேரூராட்சி அவர்களால் 07.07.2010 அன்று மாலை 3.00 மணி வரை திட்டச்சேரி பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் நாள் விடுமுறை ஏற்படின் மறு வேலை நாள் குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் திறக்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிகளை அஞ்சல் வழியாகவோ, கூரியர் மூலமாகவோ அனுப்படும்போது ஏற்படும் தாமதத்திற்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

7. தாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ள முடியாது.

8. திட்டச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளை மறுக்கவும், தள்ளுபடி செய்யவும் எந்த நேரத்திலும் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு. மேலும் ஒப்பந்தப்புள்ளிக்கான செலவுத் தொகை திரும்ப வழங்க இயலாது.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. வேலை ஆரம்பிப்பதற்கு முன்பும், வேலை நடைபெறும் போதும், வேலை முடிந்த பின்னரும் அந்தந்த நிலைகளில் புகைபடங்கள் அஞ்சல் அட்டை அளவில் போட்டோ) எடுத்து அளிக்க வேண்டும். புகைப்படங்கள் ஒப்பந்ததாரர் பொறுப்பில் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

2. வேலையின்போது வேலை முடிந்த பின்னர் மண்டல அலுவலர் (சோனல் ஆபிஸர்) பார்வையிடுவதில் வழங்கும் அறிக்கையின் பேரில் வேலைத் தொகை மாறுதலானால் மாறுதலாகும் தொகையே வழங்குவதற்கு உட்படும். சூமற்படி திட்ட வேலைகளுக்கான அரசு நிதி பேரூராட்சிக் கணக்கில் ஈடுசெய்யப்பட்ட பின்னர்தான் வேலைகளுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

3. வேலைத் தொகை யாவும், அவ்வேலையின் ஆவணங்கள் பரிசீலித்து பட்டுவாடா செய்யப்படும்.

4. ஒப்பந்தத்தாரர் தன் சொந்த செலவில் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரை வேலையில் அமர்த்திக்கொள்ளவேண்டும்.

5. பட்டியல் தொகை வழங்கும்போது பாதுகாப்பு கூடுதல் டேவணி 5ரூ தொகை பிடித்தம் செய்யப்பட்டு ஓராண்டு முடிவுக்குப்பின்னர் வழங்கப்படும்.

6. மதிப்பீட்டில், டெண்டரில் வேலைக்கான மூலப்பொருள்கள் எந்தந்த அளவுகளில் சேகரிக்க குறிப்பிடப்பட்டு உள்ளனவோ அதே அளவுகளில் சேகரம் செய்யப்படவேண்டும். ஏற்க முடியாத அளவுக்கு மீறியவைகள் / அளவுக்கு குறைவானவை நிராகரிக்கப்படும்.

7. கட்டுமான வேலைக்கான சிமெண்ட் இரும்புக் கம்பி பொருட்களை இலாகா மூலம் சப்ளை செய்ய இயலாது. ஒப்பந்ததாரர் தன் சொந்தப் பொறுப்பில், செலவில் வாங்கி உபயோகிக்க வேண்டும்.

8. சிமெண்ட், இரும்புக் கம்பி வாங்கியதற்கு ரசீதுகள் பெற்று வேலைப் பட்டியலுடன் இணைத்து கொடுக்க வேண்டும்.

யாதொரு சூழ்நிலையிலும், முடிவுற்ற வேலையை மறு அளவுகள் செய்ய உத்திரவிடப்படலாம். மறு அளவுகள் படியான வேலைத் தொகையே பட்டுவாடா செய்வதற்குரியதாகும். இதற்கு கட்டுப்பட்டே டெண்டர்கள் கொடுக்கப்படவேண்டும்.

இதர விபரங்களை அலுவல் நேரங்களில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(ஒ.ம்) கோ.இரவிச்சந்திரன், பி.காம்.,
பேரூராட்சி மன்ற தலைவர்,
திட்டச்சேரி பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

(ஒ.ம்) மு.பொன்னுசாமி,
செயல் அலுவலர்,
திட்டச்சேரி பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.